**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 72/2021**
**U/s. 379 IPC**
**PROSECUTION WITNESS NO. 4 (LW. 10)**

| | |
|---|---|
| **Name** : திரு. ராமதாஸ்(IO) | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**1** வது எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். **2** வது எதிரிஆஜர்
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.72/2021 27.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 1.45 AN**

**<u>முதல் விசாரணை:</u>**

**1,** நான் தற்போது தஞ்சாவூர் மாவட்ட தனிபிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக கடந்த 30.01.2021 ம் தேதி தஞ்சை கிழக்கு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. மகாதேவன் என்பவர் பகத் உசேன் என்பவர் கொடுத்த எழுத்து மூல புகாரை பெற்று காவல்நிலைய குற்ற எண் 1340/2020 சட்டபிரிவு 379 இதசவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் உதவி ஆய்வாளர் திரு. அடைக்கல ஆரோக்ய சாமி டேவிட் என்பவர் தனது முதல்கட்ட விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 3ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்கண்ட வழக்கினை ஆரோக்ய சாமி டேவிட் அவரது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு28.09.2020 ம் தேதி 14.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடமான தஞ்சை கீழ அலங்கம் டோர் இந்தியா கடையின் வாசலில் சாட்சிகள் முகமது கரிம் மற்றும் முபாரக் அலி ஆகியோர் முன்பாக பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அசாஆ 4 , மாதிரிவரைப்படம் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் சம்பவயிட சாட்சிகள் பகத் உசேன், செந்தமிழ் செல்வன், சிந்தனை செல்வன், சதிஷ் ஆகியோரையும் பார்வை மகசர் சாட்சிகள் முகமது கரிம் மற்றும் முபாரக் அலி ஆகியோர்களையும் விசாரணை செய்து தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எனதுமேல் விசாரணைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை எடுத்து கொண்டு நான் வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டும் உதவி ஆய்வாளர் ஏற்கனவே விசாரணை செய்த பட்டியல் கண்ட சாட்சிகள் அதே சங்கதிகளை மீண்டும் என்னிடம் கூறியதால் நான் மறு வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. கடந்த 30.01.2021 ம் தேதிமதியம் 13.00 மணியளவில் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் தொம்பன் குடிசை ஆவின் பால் பூத் அருகில் வாகன தணிக்கை

செய்தபோது அவ்வழியாக சந்கேத்திற்கு இடமாக வந்த வழக்கின் எதிரி 1 கார்த்திகேயன் என்பவர் பதிவு எண் இல்லாத இருசக்கர வாகனத்தில் வந்தபோது அவரை நிறுத்த முற்பட அவர் போலீசாரை கண்டு தப்பிக்க முற்பட எதிர்பாரா விதமாக கீழே விழுந்து லேசான காயத்துடன் இருந்தவரை உடனடியாக முதலுதவி செய்து விசாரிக்க அவர் எவ்வித அச்சுறுதலும், துன்புறுதலும் ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக , தன்னிசையாக முன்வநது கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தனிநபர் சாட்சிகள் சீனிவாசன்,ஆறுமுகம் ஆகியோர் முன்பாக பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெற்றேன். எதிரி தாமாக முன்வந்து ஓட்டி வந்த பதிவு இல்லாத கருப்பு, சிவப்பு நிற Splender pro என்ற இருசக்கர வாகனத்தை ஆஜர்செய்த வழக்கின் தடயபொருளை 14.45 மணியளவில் அதே சாட்சிகள் முன்பு மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். எதிரி 1 மற்றும் வழக்கின் தடயசொத்துடன் காவல்நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் கைப்பற்றபட்ட வழக்கின் தடயசொத்தை நீதிமன்றத்திற்கு படிவம் 95 மூலமாக அனுப்பி வைத்தேன். சிபி நம்பர் 19/2021. **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 6 , கைப்பற்றுதல் மகசர் அசாஆ 7 , படிவம் 95 அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் சீனிவாசன் மற்றும் ஆறுமுகம் ஆகியோரை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் மற்றொரு எதிரியான ஹரிபிரபு என்பவரை எதிரி 1 கார்த்திகேயன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தஞ்சை மேற்கு காவல்நிலைய குற்ற எண் 94/2021 சட்டபிரிவுகள் 379 இதச வழக்கில் 08.02.2021ம் தேதி தஞ்சை நகர துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அனுமதி பெற்று கும்பகோணம் கிளைச்சிறையில் இருந்தவரை சம்பிரதாய கைது செய்தும், PT வாரண்ட் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். கடந்த 10.02.2021 ம் தேதிவழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. மகாதேவன், மற்றும் வழக்கின் முதல்கட்ட விசாரணை செய்த உதவி ஆய்வாளர் திரு. அடைக்கல ஆரோக்ய சாமி டேவிட் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து அன்றையதினமே வழக்கின் எதிரிகள் கார்த்திகேயன் மற்றும் ஹரிபிரபு ஆகியோர் மீது இதச 379 பிரிவின் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி.,

நீதித்துறை நடுவர் எண்–I,

தஞ்சாவூர்.